*1974 மார்ச் 7]*

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :**

(அ) ஆம்.

(இ) நிதி பற்ருமை காரணமாக இப்பால வேலே நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் பரிசிலனேக்கு எடுத்துக் கொள்ளப்படவில்லே.

**திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம் :** தலேவரவர்களே, இந்தப் பாலம் 1968-ம் ஆண்டே வேண்டுமென்று நானும், எனக்கு முன்ருல் இருந்த சட்டமன்ற உறுப்பினர்களும் வற்புறுத்தி இருக்கிருேம். இனிமேலாவது இந்தப் பாலத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து சீக்கிரம் நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** அந்தப் பாலத்தின் முக்கியத்துவத்தை அரசு உணர்ந்திருக்கிறது. 1974-75-ம் ஆண்டில் நிதி நிலே வசதியைப் பொறுத்து இந்தப் பாலம் அமைக்கும் திட்டம் பரிசிலனேக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

## சடையனேரிக் கால்வாய்.

* 324 வினு—திரு. க. உரொ. எட்மண்ட் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்செந்தூர் வட்டத்திலுள்ள தென் கரைக்குளம் அதன் கீழுள்ள குளங்களுக்கென சடையனேரிக் கால்வாய் வெட்டும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசிலனேயில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், கால்வாய் வேலேகள் எப்போது ஆரம்பிக்கப் படும் ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :**

(அ) திருநெல்வேலி மாவட்டம், திருச்செந்தூர் வட்டம் கால் வாய் குளத்திலிருந்து சடையனேரி குளத்திற்குத் தண்ணீர் விடுவதற்கு ஒரு புதிய கால்வாய் வெட்டும் திட்டத்திற்கான மதிப்பீடு ரூ. 16.60 லட்ச செலவில் அரசினரால் ஜுலே 1972-ல் அங்கீகரிக்கப் பட்டது.

(இ) இத்திட்டத்திற்கான வேலேகள் நடந்து கொண்டிருக் கின்றன.

**திரு. க. உரொ. எட்மண்ட் :** தலைவரவர்களே, இந்தத் திட்டம் புதிதாக நிறைவேற்றப்பட வேண்டிய திட்டமாக இருக்கிறது. ஏற்கெனவே திருச்செந்தூர் வட்டாரத்திலுள்ள குளங்களுக்கு மணிமுத்தார், பாபநாசம் தேக்கங்களிலிருந்து வருகின்ற தண்ணீர் போதுமானதாக இல்லை என்று மாவட்ட ஆட்சித் தலைவர் அரசாங்கத்திற்குத் தகவல் அனுப்பி இருக்கிறார். மேலும் புதிய கால்வாய் வெட்டுவதானால் தண்ணீர்ப் பற்றுக்குறை ஏற்படும். பழைய குளங்களுக்குத் தண்ணீர் விட முடியாது. ஆகவே, இதை மனதில் வைத்து, இந்தப் புதிய திட்டத்தை அரசாங்கம் மறு பரிசீலனை செய்யுமா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** கால்வாய் வெட்டுகின்ற வேலை நடைபெற்றுக்கொண்டிருப்பதாக எனக்குத் தகவல் வந்திருக்கிறது. போதுமான அளவுக்குத் தண்ணீர் இருக்கிறது என்று தெரிந்த பின்னால்தான் இந்த வேலை தொடங்கப்பட்டிருக்கிறது என்று கருதுகிறேன். இருப்பினும் தொகுதி அங்கத்தினர் இப்படிச் சொல்வதால் அதுபற்றிப் பரிசீலனை செய்யலாம்.

### கோவில்பட்டி வட்டத்தில் புதிய குளம்.

*325 **வினா—திரு. எம். முத்தையா :** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், கோவில்பட்டி வட்டம், எப்போதும் வென்றானுக்கு அருகாமையில் புதிதாகக் குளம் ஒன்று அமைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் ஆய்விலுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் எஸ்டிமேட் தொகை எவ்வளவு ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :**

(அ) ஆம்.

(இ) ரூபாய் 18.33 லட்சங்கள்.

**திரு. எம். முத்தையா :** தலைவரவர்களே, இதனுடைய தொடக்க வேலை எப்போது ஆரம்பிக்கப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** இந்த ஆண்டு ஒப்புதலுக்காக எடுத்துக் கொள்ளப்படும்.